# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 62/2022

பிரதிவாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டிதாய் | பி.வா.சா.–1 | |
| க/பெ. | பாண்டியராஜன் | | |
| கிராமம் | காளையார் கரிசல்குளம் | தொழில் | கூலி வேலை |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 65 |

-----------------------------------------------------------

முதல் விசாரணை 20–02–2026.

நான் இந்த வழக்கின் 1ம்பிரதிவாதி. வழக்கு விபரம் எனக்கு தெரியும். 1ம்பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை 1ம்பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 12.02.1985 தேதிய சீத்தாராமன் என்பவர் 2, 3 பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்துள்ள பதிவு உயில் சாசனம் சார்பதிவாளர் நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 09.12.2015 தேதிய தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை 2, 3 பிரதிவாதிகளிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய ஆவணம் அசல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 08.03.2016 தேதிய தாவா சொத்திற்குரிய பட்டா மாறுதல் உத்தரவு இணையதள நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 29.03.2016 தேதிய தாவா சொத்திற்கு என்னுடைய பெயரில்உள்ள கணினி பட்டா இணைய தள நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.20 17:19:24 +0530